447

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப் பரீட்சை (இரண்டாம் அரையாண்டு) – **2006/2007**
**ESP 1103 -** கல்வி அளவீடும் மதிப்பீடும்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 10.11.2007 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.
அடிப்படைக் கணிதச் செயற்பாடுகளுக்கு "கல்குலேற்றர்கள்" பயன்படுத்த முடியும்.

## பகுதி I

01. கற்றல் விளைவுகளை மதிப்பிடுகையில் "விவரணப் பகுப்பாய்வு" என்பதனால் கருதப்படுவது யாது?

02. கல்வி அளவீடுகளின் பிரதான இயல்புகள் மூன்றினைக் குறிப்பிடுக?

03. சோதனை உருப்படி ஒன்றின் "பிரித்தறி திறன்" என்பது யாது?
உதாரணங்களின் அடிப்படையில் விளக்குக.

04. திரள் மீடிறன் வளையியின் இயல்புகளை உருவரிப்படத்தின் அடிப்படையில் விளக்குக?

05. பிள்ளை ஒன்றின் "உளவயது" என்றால் என்ன?

10 வருடங்கள் வயதுடைய பிள்ளையொன்றின் உளவயது 11 வருடங்களும் 6 மாதங்கள் எனவும் கண்டறியப்பட்டது

அவரின் "நுண்மதி ஈவு" இனைக் கணிக்க.

06. பொது நோக்கங்களுக்கும், சிறப்பான நோக்கங்களுக்கும் இடையிலான வேறுபாட்டினை உதாணங்கள் மூலம் விளக்குக?

07 "சமூகமாண பரீட்சை" என்றால் என்ன?
ஆசிரியருக்கு அதன் பயன்பாடுகளை விளக்குக?

08. "நியம அட்டவணை" என்பதனால் யாது கருதப்படுகின்றது?

கல்வி மதிப்பீடுகளில் பயன்படுத்தக்கூடிய நியம அட்டவணை வகைகள் மூன்றினைப் பெயரிட்டு அதில் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக?

## பகுதி II

09. (i) பிள்ளையொன்றின் "எழுச்சி சார் வளரச்சி" என்பதனால் யாது கருதப்படுகின்றது.

(ii) மனப்பாங்கினை அளவிடுவதற்கு "தேஸ்டனின் அளவுத்திட்ட வெளியீட்டுமுறை" என்பதனை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை உதாரணங்கள் மூலம் விளக்குக?

(iii) (அ) "இரசனை" என்பதனால் நீங்கள் யாது கருதுகின்றீர்கள்? இரசனைக்கு உதாரணங்கள் 2 தருக?

(ஆ) இரசனையை அளவிடும் முறையினை உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக?

10. (i) "பாடசாலை அடிப்படையிலான கணிப்பீடு" என்பதனால் கருதப்படுவது யாது?

(ii) இக்கணிப்பீட்டுச் செயன்முறையின் பிரதான இயல்புகள் மூன்றினைக் குறிப்பிடுக?

(iii) தெரிவு செய்யப்பட்ட தரமொன்றில் நீங்கள் கற்பிக்கும் பாடம் தொடர்பாக பாடசாலை அடிப்படையிலான கணிப்பீட்டினை நடத்தும் முறையினை விளக்குக.

(iv) இக்கணிப்பீட்டுச் செயன்முறையினை நடைமுறைப்படுத்துகையில் ஆசிரியர் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகள் மூன்றினை ஆராய்க?

11. பின்வரும் யாதாயினும் நான்கு பற்றி சுருக்கக் குறிப்புகள் எழுதுக.

(i) மதிப்பீட்டுச் செயன்முறையின் உள்ளடங்கிய பிரதான படிமுறைகள்.
(ii) உளச்சார்புச் சோதனைகள்.
(iii) சோதனை உருப்படியொன்றின் நம்பகம்.
(iv) மையநிலை அளவீடுகளைப் பயன்படுத்தி பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்தல்.
(v) ஓகைவ் இனைப் பயன்படுத்தி கால்மான விலகலைக் கணித்தல்.
(vi) பல்தேர்வு சோதனை உருப்படிகளை தயாரிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டிய அடிப்படைக் காரணிகள்.

12. வருட இறுதிப் பரீட்சையொன்றின் வகுப்பொன்றிலுள்ள 30 மாணவர்கள் பெற்ற புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51 | 38 | 25 | 10 | 13 | 85 | 18 | 70 | 22 | 27 |
| 82 | 64 | 55 | 45 | 57 | 40 | 37 | 62 | 75 | 45 |
| 47 | 60 | 72 | 50 | 42 | 30 | 68 | 46 | 52 | 34 |

(i) (39–51) என்பதனை வகுப்பாயிடைகளில் ஒன்றாகக்கொண்டு மேற்தரப்பட்ட புள்ளிகளின் மீடிறன் பரம்பல் அட்டவணையொன்றைத் தயாரிக்குக.

(ii) இப்பரம்பலின் ஆகாரம், இடையம் என்பனவற்றைக் கணிக்குக.

(iii) ஊக இடை(39–51) என்ற வகுப்பாயிடையில் இருப்பதாகக் கொண்டு கூட்டலிடையினைக் கணிக்குக?

(iv) இப்புள்ளிகளின் பரம்பலின் நியம விலகலைக் கணிக்குக.

13. (i) "இணைபு", "இணைபுக் குணகம்" என்னும் பதங்களை விளக்குக?

(ii) "பூரண நேர் இணைபு" என்பதனால் யாது கருதப்படுகின்றது?

(iii) வருட இறுதிப் பரீட்சையொன்றின் 10 மாணவர்கள் கணிதம். விஞ்ஞானத்தில் ஆகிய பாடங்களில் பெற்ற புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | A | B | C | D | E | F | G | H | I | J |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கணிதம் | 52 | 67 | 35 | 45 | 67 | 55 | 30 | 80 | 60 | 40 |
| விஞ்ஞானம் | 76 | 58 | 40 | 55 | 60 | 60 | 25 | 70 | 56 | 45 |

(அ) கணிதம், விஞ்ஞானம் புள்ளிகளுக்கிடையிலான வரிசைநிலை வித்தியாச இணைபுக் குணகத்தினைக் கணிக்குக.

(ஆ) நீர் பெற்ற இணைபுக் குணகத்தின் பெறுமானம் தொடர்பாக உமது கருத்தை முன்வைக்குக.

14. (i) "புள்ளித் தொகுதி ஒன்று செவ்வன் நிகழ்தகவு வளையியின் அடிப்படையில் அமைந்துள்ளது". இக்கூற்றினால் கருதப்படுவது யாது? அவ்வாறான பரம்பலின் 3 இயல்புகளை விளக்குக:

(ii) 1500 மாணவர்கள் ஆங்கிலப் பரீட்சையொன்றில் பெற்ற புள்ளிகள் செவ்வன் நிகழ்தகவு வளையி பரம்பலில் அமைந்து காணப்பட்டன. இப்பரம்பலின் கூட்டல் இடை, நியமவிலகல் முறையே 45, 15 ஆகும்.

(அ) மிகச் சிறந்த 5% மாணவர்களுக்கு A தரமும், மிகக்குறைந்த 5% வர்களுக்கு E தரமும் வழங்கப்பட்டதாயின் மேற்கூறிய தரங்களுக்கான எல்லைப் புள்ளிகளைக் காண்க.

(ஆ) 55 புள்ளிகளுக்குக் கூடுதலாகப்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையைக் கணிப்பிடுக:

(பதிப்புரிமை பெற்றது)